Australian Government
Department of Home Affairs

# இலவச உரைபெயர்ப்பு சேவைகள்

## கோவிட்-19ன் விளைவால் சேவைகளில் மாற்றங்கள்

தரமான உரைபெயர்ப்பு சேவைகளை பயன்படுத்துவது, ஆங்கில மொழித்திறன் முற்றிலுமில்லாத அல்லது குறைவாக உள்ள மக்களுக்கு, இந்த கோவிட்-19 சூழ்நிலைக் காலத்தின்போது விளைவுமிக்க பங்காற்றக் கூடியதாகும்.

உரைபெயர்ப்பு சேவைகள் கிடைக்குமிடத்து மக்கள் அவற்றை அவசியம் பாவித்துக் கொள்ள வேண்டும்.

**கோவிட்-19 மற்றும் அதன் அறிகுறிகள்** பற்றி அறிந்து கொள்க

## இலவச உரைபெயர்ப்பு சேவைகள் என்பது என்ன?

இலவச உரைபெயர்ப்பு சேவையானது (எஃப்.ஐ.எஸ். - FIS) நீங்கள், கீழ்க்காண்பவைகளுக்கு பொருந்தியவராக இருந்தால் உங்களுக்குக் கிடைக்கும்:

- ஆஸ்திரேலியாவில் இருப்பவர்
- ஒரு மெடிக்கேர் அட்டை உடையவர் மற்றும்
- குறைவான ஆங்கில மொழித்திறன் கொண்டவர்

## இலவச உரைபெயர்ப்பு சேவைக்கான அணுகலை நான் எவ்வாறு பெறுவது?

கீழ்க்காணும் சேவை வழங்குநர்கள் உங்கள் சார்பாக இந்த இலவச உரைபெயர்ப்பு சேவையை அணுக முடியும்:

- தனியார் மருத்துவ நிபுணர்கள்
- மருந்தாளர்கள்
- அரசு சாராத அமைப்புகள்
- வீடு முகவர்கள்
- உள்ளூராட்சி நகர்மன்றங்கள் போன்றதான, உள்ளூராட்சி அரசாங்க அதிகாரிகள்
- தொழிற்சங்கங்கள்; மற்றும்
- பாராளுமன்ற உறுப்பினர்கள்.

இச்சேவைகள் குறித்ததான மேலதிக தகவல்களை **இங்கே** காண்க.

மேற்கூறிய சேவை வழங்குநர்கள், நீங்கள் உங்கள் சொந்த மொழியில் தகவல்களும் அறிவுரையும் பெறுவதை உறுதிப்படுத்த, ஒருசில நிமிடங்களுக்குள்ளாகவே ஒரு தொலைபேசி உரைபெயர்ப்பாளருடன் இணைந்திட முடியும்.

## உரைபெயர்ப்பாளர்கள்

மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கான அதிகார அங்கீகாரம் வழங்கும் தேசிய ஆணையத்தினால் (நாட்டி - NAATI) ஆதாரச்சான்றளிக்கப்பட்ட உரைபெயர்ப்பாளர்கள் பாவிக்கப்படுகின்றனர். இந்த உரைபெயர்ப்பாளர்கள் ஒரு தொழில்நேர்த்திக்கான நன்னெறிக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள்; இந்நெறிகள் அவர்களிடம் கீழ்க்காணும் தேவைப்பாடுகளையும் வைக்கின்றன:

- தகவல்களை துல்லியமாகவும் நேர்மையாகவும் உரைபெயர்த்தல்
- இரகசியத்தன்மையை பாதுகாத்தல்
- நடுநிலையோடும் கருத்துக்கூர்மையோடும் இருத்தல்; மற்றும்
- எல்லா காலத்திலும் தொழில்நேர்த்தியான முறையில் செயல்படல்.

இந்த இலவச உரைபெயர்ப்பு சேவையின் கொள்கையானது கிடைக்கக்கூடியவர்களில் உயர்ந்தபட்ட ஆதாரச்சான்றளிக்கப்பட்ட உரைபெயர்ப்பாளரை பாவித்துக் கொள்வதாகும். இந்த காரணத்திற்காக குறிப்பிட்ட உரைபெயர்ப்பாளர்களை கேட்டுக்கொள்வது ஊக்கப்படுத்தப் படுவதில்லை.

## எஃப்.ஐ.எஸ். என்ன சேவைகளை வழங்குகிறது?

- உடனடி தொலைபேசி உரைபெயர்ப்பு. இந்த சேவை திட்டமிடப்படாத உரைபெயர்ப்புக்கு ஆகச்சிறந்த பயனளிக்கிறது, மற்றும் கீழ்காண்பனவற்றையும் வழங்குகிறது:
  - 160க்கும் மேலான மொழிகளில் 3000க்கும் மேலான உரைபெயர்ப்பாளர்களுக்கான அணுகல்
  - ஒரு வாரத்தில் 7 நாட்களும், ஒரு நாளில் 24 மணிநேரமும் உரைபெயர்ப்பு சேவைகள்
  - அழைப்பெடுத்த ஒருசில நிமிடங்களுக்குள் ஓர் உரைபெயர்ப்பாளருக்கு இணைப்பு.
- முன்பதிவு செய்யப்பட்ட தொலைபேசி உரைபெயர்ப்பு.
  - திட்டமிடப்பட்ட உரைபெயர்ப்புக்கு அல்லது குறைவான பொதுப்புழக்கத்திலுள்ள ஒரு மொழியை நீங்கள் கோரிக்கொள்ள தேவை இருந்தால், இது பயனளிக்கும்.